செய்தித் தாளாகப் பதிவுபெற்றது — வெள்ளிக்கிழமை தோறும் வெளிவருவது

உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவ பரிபாலன சபை வெளியீடு. — பிரதி விலை: சதம் 20

ஆரம்பம்: விரோதி ஸு (1889) ஆவணிமீ 28-ம் உ — அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். — தொலைபேசி: 356

புத்-அஎ] யாழ்ப்பாணம்:- இராக்ஷத ஸு ஆனி மீ ௨0 ·உ வெள்ளிக்கிழமை (4-7-1975) [இல: கஙு

## முருகப் பெருமானின் கருணை வளம்

முருகப் பெருமான் கிரவுஞ்சமலையை அழித்து தாரகாசூரனைக் கொன்று விட்டு சூரபன்மனுடன் போர் செய்தற்கு செல்லும் வழியில் திருச்செந்தூரில் வீற்றிருந்தார். வீரவாகு தேவரை சூரபன்மனுடன் பேசித் தேவர்கள் சிறையை மீட்பதற்கு தூது அனுப்பினார். இந்திரன் மைந்தனாகிய சயந்தகுமாரனும், ஏனைய தேவர்களும் சிறையில்கொடூரமாக துன்புறுத்தப்பட்டார்கள். விற்பயிற்சியினால் தழும்புபடைந்திருக்கும் கைகளைப் போல விலங்கு பூண்டதனாற் கால்களும் தழும்படைந்திருந்தன. ஒரு கணப்பொழுதும் தூங்காத இயல்பு பெற்ற தேவனாதலால் அவன் நீங்காத துன்பத்தில் ஆழ்ந்தான். துன்பம் தாங்கமுடியாது வலிய உயிரை விடுவான். அழுதப் உண்டதனால் இறக்க முடியாது வருந்தி அழகிழந்து உய்யும்வழி நாடி சிவபெருமானைநோக்கிப் புலம்பி மாகத்தினால் செய்த ஓவியம் அழுக்கடைந்தாற் போல உணர்வெல்லாம் மயங்கி நிலத்தில் வீழ்ந்தான்.

எண்ணற்ற உயிர்கள் தோறும் கலந்து இன்னருள் புரிகின்ற முருகக் கடவுள் வலப் பக்கத்திலே கொடி, வச்சிரம், அங்குசம், அம்பு, வேல், அபயம், ஆகிய இவைகளும் இடப்பக்கத்தில் வரதம், தாமரை, மணி, மழு, தண்டு, வில் ஆகிய இவைகளும் பொருந்திய பன்னிரண்டு திருக்கரங்களும் ஆறு திருமுகங்களும் கொண்டு சயந்தனுடைய கனவிலே தோன்றி தம் திருவுருவத்தைக் காட்டியருளினர்.

வளர்ச்சி 2-ம் பக்கம்

## குரு-சீட மரபிற் பண்ணிசை

—0—



குரு: திரு. இ. அப்பாசாமி ஓதுவாமூர்த்தி அவர்கள்



சீடர்: திரு. மு. குமாரசிங்கம் அவர்கள்

சென்ற 'இந்துசாதன' இதழில் (27-6-75) வெளிவந்த பண்டிதமணி அவர்களின் சிறந்த விஞ்ஞாபனத்திலே குறிக்கப்பெற்ற தமிழக ஓதுவா மூர்த்தி திரு. இ. அப்பாசாமி அவர்களையும், சீடன் திரு. மு. குமாரசிங்கம் அவர்களையும் நேர்முகமாக இவ்விதழில் அறிமுகப் படுத்துகின்றோம்.

### இலவசம்

12-7-75 அன்று மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசையை முன்னிட்டு சமய தீட்சை வைக்கும் சங்கங்கள் சைவ அனுட்டான விதி என்ற புத்தகத்தையும், மாணிக்கவாசக சுவாமிகள் படத்தையும், நிலைய அத்தாட்சிப் பத்திரம் அனுப்பி யாழ். மில்க் வைற் தாபனத்தாரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம் — கோட்டை
ஸ்ரீ முனீஸ்வரன் தேவஸ்தான

## மணவாளக்கோல சங்காபிஷேகம்

வருகிற 9-7-75 புதன்கிழமை தொடக்கம் 20 நாட்களுக்குத் தினமும் மாலை 4 மணி தொடக்கம் 6 மணி வரை கோட்டை ஸ்ரீ முனீஸ்வரப் பெருமானுக்கு விசேஷ ஸ்நபனாபிஷேகமும், பூசை ஆராதனைகளும் நடைபெறும்.

தொடர்ந்து 20 தினங்கள் முறைப்படி இரவு 7 மணிமுதல் 9 மணி வரை சைவப் பிரசங்கமும் திருமுறை ஓதலும் இடம் பெறும.

21ம் நாள் காலை 8 மணியளவில் அஷ்டோத்தரசத சங்காபிஷேகமும், விசேஷ பூசை ஆராதனைகளும் நடைபெறும், பின்னர், ஸ்ரீ முனீஸ்வரப் பெருமான் அலங்கரிக்கப் பெற்று மங்கல வாத்தியப் பேரொலி இசையுடன் திருவீதிவலம் வருவார்.

தினந்தோறும் இரவு 7 மணி முதல் 9 மணிவரை, உரும்பிராய் இந்துக் கல்லூரி முன்னாள் கனிஷ்ட அதிபர், பண்டிரத்தினம், வித்துவான், சைவப்புலவர், சுவத்திரு இ. நவரத்தினக் குருக்கள் அவர்கள் திருவிளையாடற் புராணம் விரிவுரையைத் தொடர்ந்து நிகழ்த்துவார்கள்.

கொக்குவில், மாத்தனைக்
கந்தசுவாமி கோவில்

## திருவிழா

—0—

கொக்குவில், மாத்தனைக் கந்தசுவாமிகோவிற் திருவிழா கொடியேற்றத்துடன் (3-7-75) நேற்றுச் சிறப்பாக நிகழ்ந்தது.

13-7-75 ஞாயிற்றுக்கிழமை தேர்த் திருவிழாவும், 14-7-75 தீர்த்தத் திருவிழாவும், 16-7-75 பூங்காவனமும் (திருக்கல்யாண வைபவம்) நடைபெறும்.

பதினொரு நாட்களும் சிறந்த சொற்பொழிவுகளும், இன்னிசை விரிவுரையும் இரவு 6-45 தொடக்கம் நிகழவிருக்கின்றன.

### மணவாளக்கோலம்

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை மேற்பார்வையில் உள்ள புண்ணியநாச்சி மட தர்மம், தோப்பு சிதம்பரம் சித்திவிநாயகர் கோயில் மணவாளக்கோல அபிடேகம் 19-6-75 வியாழக்கிழமை சபை ஆதரவில் பிரம்மஸ்ரீ எஸ். சிவசுப்பிரமணியஐயர் மேற்பார்வையில் நடைபெற்றது. அயலில் உள்ள பக்தர்களும் பங்குபற்றினார்கள்.

உ
சிவமயம்

## கார்த்திகை நட்சத்திர மடாலய தருமம்
## மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசை



நாள்:- ஆனி மாதம் 28 (12-7-75) சனிக்கிழமை

இடம்:- சைவபரிபாலன சபையாரது நாவலர் ஆச்சிரம மண்டபம்

### நிகழ்ச்சிகள்

முற்பகல்:- 10 மணி — சிவபூசை
சிவபூஜா மண்டபத்தில் சிவபூசை.
11 மணி புராண படனம்
வாதவூரடிகள் புராணம்
12-30 மணி விசேட பூசை
12-45 மணி — மாகேசுர பூசை

### மாணிக்கவாசக சுவாமிகள் விழா

மாலை 6 மணி
தலைவர் திரு. த. சோமசுந்தரம் அவர்கள்

1. தேவாரம்
2. 6-00 — 6-45 திருவாசகம் ஓதல்
   சங்கீதபூஷணம திரு. இ. நடராசா அவர்கள்
3, 6-45 — 700 தலைவர் முன்னுரை
4. 7-00 — 7-15: சிற்றுரை.
   வி, ருத்திரகுமாரன் (மாணவர்: யாழ். மத்திய கல்லூரி)
   "வாதவூரர் வழங்கிய தேன்"
5. "மணிவாசகமும் திருவாசகமும்"
   திரு. அருள். தியாகராசா அவர்கள்
   (இலங்கை வானொலியின் ஓய்வுபெற்ற நிகழ்ச்சி தயாரிப்பாளர்)
6. நன்றியுரை
7, தேவாரம்

சைவாபிமானிகளை சமூகமளிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சைவபரிபாலன சபை
யாழ்ப்பாணம், 1-7-75.

வை. இரகுநாதமுதலியார்
கௌரவ காரியதரிசி,

இலங்கை

## இந்து இளைஞர் பேரவை

கொழும்பு இராமகிருஷ்ண நூல் நிலைய மண்டபத்தில் நடைபெற்ற இந்து இளைஞர் மகாநாட்டில் இலங்கை இந்து



திரு. ம. சிவனேசராசா
[தலைவர்]

இளைஞர் பேரவையின் தலைவராக திரு. ம. சிவநேசராசா தெரிவு செய்யப்பட்டார். தலைமைச் செயலாளரான திரு. க. சிவகுமாரனும், நிதிச் செயலாளராக திரு. தா. சண்முகநாதனும் தெரிவு செய்யப்பட்டதுடன் பிரதேச ஆட்சிக் குழு உறுப்பினராக யாழ்ப்பாணத்திற்கு திரு. மயில் அமிர்தலிங்கமும் பண்டாரவளைக்கு திரு. க. சண்முகநாதனும் திருக்கோணமலைக்கு திரு. ப, கந்தசாமியும், உடப்பு (புத்தளம்)க்கு திரு. கா. வாசகமூர்த்தியும், கோமாரிக்கு திரு. க. ஆறுமுகமும், மூதூருக்கு திரு ஓ. குலேந்திரனும் தெரிவு செய்யப்பட்டனர்,

உத்தேச அறநிலைய பாதுகாப்பு மசோதாவை அமுல் செய்யக்கூடாதென கலாச்சார அமைச்சரைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானமும் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டது. ——

### திருவாசக பாராயணம்

தெல்லிப்பளையைச் சார்ந்த இளைப்பாறிய விதானையும் திருவாசகத் திருமுறையைப் பாராயணம் செய்வதில் பெரும் ஈடுபாடுடையவருமாகிய பெரியார் திரு, இ. துரைச்சாமி அவர்கள் கொழும்பு இராமக் கிருஷ்ண மண்டபத்தில்சென்ற 22-6-75 ஞாயிறன்று சிறப்பாக திருவாசகப் பாராயணம் செய்தார்கள். ——



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்க தண்புனல்
வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர்தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

இராக்ஷத ஹூ ஆனி மீ உ0-உ வெள்ளி

## ஏட்டுறவாக மட்டும் இருத்தல் கூடாது

'ஒன்றுபட்டால் உண்டுவாழ்வு' என்ற உயர்ந்த கருத்தைச் சுப்பிரமணிய பாரதியார் சுவை பெறப் பாட்டில் அமைத்தார் "கூடிப் பனங்கட்டிக் கூழ் காய்ச்சுவோம்" என்று ஆடிப் பிறப்பை வரவேற்றிசையமைத்தார் நவாலியூர் நற்புலவர் சோமசுந்தரனார். இவை மட்டும் அல்ல, இலக்கியத்திற் கூட்டுறவுக் கொள்கையைப் போற்றி இன்றியமையாததொன்றென்று பண்டிதர்கள் பாவலர்கள் படித்தவர்கள் பலர் ஆங்காங்கு அவ்வப்போது அழகுற அறிவுறுத்தி யிருக்கின்றனர். எனவே கூட்டுறவு இயக்கத்திற்குக் காலம் நிர்ணயிக்கும்பொழுது இவ்விலக்கியங்களை யெல்லாம் ஆராய்ந்து முடிவு செய்தல் வேண்டும். சுருங்கச் சொல்லுகில் மனிதப் பண்பு என்றுளதோ அன்றே கூடி நன்மை தேடுங் கொள்கையும் தீமையிலிருந்து விலகிக்கொள்ளும் திட்டமும் உண்டு என்றால் அது உண்மையாகும்.

இன்று கூட்டுறவாளர் நாள் என்று உலகெங்கும் நன்றி பாராட்டி நல்லாசி கூறுகின்றனர்; கூறிக் களிப்படைகின்றனர். வெற்றியீட்டியதிவ்வியக்கம் என்று சொன்மாரி பொழிகின்றனர். நாட்டு விருத்திக்கு எடுத்துக்காட்டு கூட்டுறவுக் கொள்கையென்று கூறிவிட்டாற் போதாது. ஏட்டில்மட்டும் இருத்தல் பொருந்தாது. செயல் வழியாக, நடைமுறையாக ஒருங்குசேர்ந் துழைப்பதன் பயனை மக்கள் உணர வைத்தல் வேண்டும்.

திருக்கோணமலையிலே அண்மையில் அமைச்சர் ஒருவர், அவரும் கூட்டுறவுத்துறை அமைச்சர் ஒற்றுமையை வேண்டி ஒரு நல்ல முன்மாதிரி காட்டியிருப்பது குறிப்பிடத்தக்கது. தனது வரவை ஏற்க மறுத்த பாராளுமன்றத்து உறுப்பினரின் இல்லத்திற்குச் சென்று கலந்துரையாடி குளிர்பானமுமருந்தி ஒற்றுமைக்கு வழிகாண வேண்டும் என்று பரிந்துரைத்தமையும் பாராட்டுக்குரியது. நாடும், நாட்டு மக்களும் நன்மையுறவும்; கேடும் கேட்டின் பரிவாரங்களும் நீங்கவும் மக்கள் எவ்வகையிலும் கூடியுழைப்பது வாழ்வைக் கொடுக்கும்; இன்றேல் எல்லாம் தாழ்வுறும என்று நாம் சொன்னால் அது புதிய கருத்து அல்ல. பழைய நெறியை நினைவுகூற வைக்கும் விளக்கமே.

கூடிச் செயலாற்றும்வகையிலே குறுக்கிடும் இழுக்குகளைப்பற்றியும் நாம் எடுத்தாளாமலிருக்க முடியாது நிருவாகப் பொறுப் பேற்றிருப்பவர்கள் தங்களுக்குள் ஒருவரோடொருவர் பொருதிக்கொண்டு தனிப்பட்ட முறையிலே வாக்குவாதஞ் செய்து ஈற்றில் அந்தத் தாபனத்தையே பழிக்காளாக்கிப் பாதகம் புரிகின்றதைப் பொதுமக்கள் பலமுறையுங்கண்டு நிலைகுலைந்து விடுகின்றனர். தாமும் இரு கட்சிகளாகப் பிரிந்து இயக்கத்துக்கு இடையூறாக நடந்துகொள்கின்றனர். இவ்வகையாக இயக்கத்துக்கு இழுக்குத் தேடுகின்றவர்களை நிலைமையையும் நெறியையும் உணர வைப்பதே கூட்டுறவுத் தினத்தில் முதறகண் எடுக்க வேண்டிய தொண்டுப் பணியென்பதை நாம் இங்கே குறிப்பாக எடுத்துக் காட்டி 'வாழ்வுக்கு வழி ஒருங்கு சேர்ந் துழைத்தல் என்ற பண்பாடாகும கூட்டுறவு வாழ்க வாழ்க என்று இறைவனை இறைஞ்சி நிற்கின்றோம்.

—:ப:—

உ

### குழைத்தபத்து

திருச்சிற்றம்பலம்.

குழைத்தாற் பண்டைக் கொடுவினை நோய்
காவாயுடையாய் கொடுவினையேன்
உழைத்தாலுறுதி யுண்டோதான்
உமையாள் கணவா எனையாள்வாய்
பிழைத்தாற் பொறுக்க வேண்டாவோ
பிறைசேர் சடையாய் முறையோவென்
றழைத்தால் அருளா தொழிவதே
அம்மானேயுன் அடியேற்கே. (1)

திருச்சிற்றம்பலம். - திருவாசகம்

மாணிக்கவாசகசுவாமிகள் அருளிய

## திருவாசகம்

— புலவர் சிவங். கருணாலயபாண்டியனார் அவர்கள் —

(முன் வளர்ச்சி)

### நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே!

உரை: அன்பு மீதூர்தலான் நீர் போன் றுள்ளமு முயிருமென்பு மூனும் உருகச் செய்து அவை கரைந்தபொழு தெஞ்சிய நுண்ணிய னெனதுயிரா யிருந்தானே!

தமதுயிருங் கரைந்து போதலால் இப்பொழுதெனக் குயிர் இறைவனல்லதில்லையென்னுங் கருத்தான் என்னாருயிராய் நின்றானென்றார்.

### இனபமுந் துன்பமு மில்லானே! யுள்ளானே!

உரை: தன் பெரும் பேரின்ப வியற்கையின் முன் முனைத்து நில்லாமையின் இன்பமுந் துன்பமும் எஞ்ஞான்று மில்லாதானே! உயிர்களொடு வேறுகாது அவையே தானாயிருத்தலின் அவையுறு மின்பமுந் துன்பமு முள்ளானே!

அவற்றவ் விரண்டு முண்மை கூறிதெனப்படும். வினை யெனப் படாது- அதனால் அவன் வேண்டுமாற்றான் வரும்.

இனி அவற் கவ்விரண்டு மின்மையு முண்மையு மொக்குமென் பதூஉம் போதரும். எனவே வேண்டுதல் வேண்டாமை யிலனென் பதாம்,

### அன்பருக் கன்பனே! யாவையுமா யல்லையுமாஞ் சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே

உரை: நின்பால் அன்பராயினார்க் கவர் விழையு மன்பனாகி வருவோனே! நல்லார்க்கு நல்லையுமாய் நல்ல ரல்லார்க்கு நல்லை யல்லையுமாயிருந்து முறையே ஒளியும் அடர்ந்த இருளுமா யிருப்பவனே! நின் பெருமை நினக்குத் தோன்றாதிருப்பவனே!

அன்பரதன்பு மேன் மேலும் பெருகி அயராவன்பென்னும் பேரின்பமாதற் பொருட் டிறைவன் அவர்க்கன்பனாகி வருதல் வழக்காம்.

ஆவை: அல்லை யென்பதன் உடன்பாட்டு முன்னிலை யொருமை வினைப் பெயர். நல்லை யென்றவாற. ஆவன செய்க வென்பார்க்கு நல்லன செய்க வென்பது பொருளாமாறு காண்க.

நல்லாரை ஒளியாயிருந்து செந்நெறி காட்டிச் செலுத்தியுய்வித்தலானும், அல்லாரை இருளாயிருந்து நெறியல்லா நெறிச் செலுத்திக் கெடுத்துய்வித்தலானும் சோதியுந் துன்னிருளு நிரனிறையாமாறு காண்க, துன்னிருள், அடர்ந்த இருள்.

எளியாரிடம் வலிந்து சென்று வழிபாடும் வரவேற்பும் பெறுது இளிவா லெய்தி நிற்றலை மூனியாமையின் இறைவன் றன் பெருமை தனக்குத் தோன்றாதவனென்பது பெறப்படும்; அல்லதூஉம் எளியாரதன்பிலகப்பட்டுக் குற்றேவல் செய்தலுமுடைமையான் அன்னாதலும் பெறப்படும்.

(வளரும்)

## நாவலர் பிள்ளைத்தமிழ்

ஆக்கம்: "பழைய பாணி"

[ பத்தாவது : சிறுதேர்ப் பருவம். ]

(முன் வளர்ச்சி — 75)

மைந்தர்கள் குறும்பாடல் தஞ்செயல் தடுப்பினும்
மகிழ்ந்தனு மதிக்குநோன்மைத்
தந்தையர்கள் வாத்சல்ய மெந்தைசிவ னார்க்குற்ற
சால்புநனி வாழி வாழி !
மூந்துநம் முததாதை மூப்புரத் தசுரர்மேல்
முடுக்குதே ரச்சறுத்தான்
மூன்னிளவ லதுபோல்வ தின்னினியென் பங்கென
முகிழ்குது கலிப்பினேடி
வந்தனைகொள் வண்ணைவைத் தீஸ்வரர்
மகிழ்ந்தேற
மருவுதேர் வழிமறித்து
வாகைவடி வேற்குமர னேகையினெ
டூர்ந்தகதை
வாய்மொழியு முதியர்விழிநீர்
சிந்தநெகி ழுன்புருகு சத்தமிகு நல்லையாய்
சிறுதே ருருட்டியருளே
செந்தமிழ் வளங்குலவ வந்தரு ளினங்சூழுவி
சிறுதே ருருட்டி யருளே. (5)

### மாதந்தோறும் பரணித் திருவிழா

யாழ். [illegible] ளவில் கோயில்கொண்டெழுந் தருளியிருக்கும் ஸ்ரீ ஞான வைரவ சுவாமி கோவிலில் பரணித்திரு விழா வழிபாடும் பஜனை நிகழ்ச்சியும் (4-7-75) இன்று மாலைநிகழும்,

### முருகப் பெருமானின்

1- ஆம் பக்கத்து வளர்ச்சி

வீறுகேதனம் வச்சிரம் அங்
குசம் விசிகம்
மாறிலாத வேல் அபயமே
வலமிடம் வரதம்
ஏறு கயம் மணி மழுத்
தண்டு வில் இசைந்த
ஆறிரண்டு மக ஆறுமுகங்
கொண்டு வேள் அடைந்
தான்.

சயந்தன் சூக்கும சரீரத்தில் உள்ள ஞானக்கண்களால் வேண்டுவார் வேண்டுவதை வழங்கும் ஞானபண்டிதனைத்தரிசித்தான்; "எனது துன்பத்தைக் களைய வந்த நீவிர் யாவர்" சொல்லியருளும் என்றான். மெய்ஞானிகளுடைய அறிவினால் அறிவாய் இருப்போராகிய முருகக்கடவுள் "கொன்றையைச் சூடிய சிவபெருமானின் குமரன் ஆவோம், உனது துன்பத்தை நீக்க வந்தோம்" பிரமனும், திருமாலும ஏனைய தேவரும் நலமே உள்ளார்கள் உனது தங்கை தேவயானை மேருமலையில் இருக்கின்றார், சூரபன்மனையும் அவன் கிளைகளையும் அழித்து உன்னையும் தேவர்களையும் சிறைமீட்டு விண்ணுலக வளங்களைத்தந்து அருள் புரிவோம், உனது துயரை ஒழிப்பாயாக" என்று கூறியருளினார். திருவருள் புரிகின்ற தாய் அனைய முருகப்பெருமானின் கருணை வளந்தான் என்னே!

### யாழ். இந்துக்கல்லூரி தமிழ் கலவன் பாடசாலை

மேற்படி பாடசாலையில் புதிய கல்வித் திட்டத்திற்கமைய அமைக்கப்பட்ட பாலர் வகுப்பை மில்க்வைற் அதிபர் திரு க. கனகராசா J-P. அவர்கள் 27-6-75 வெள்ளிக்கிழமை காலை சைவமுறைப்படி குத்துவிளக்கேற்றி திறந்து வைத்தார். அன்னாரை வரவேற்று உரை நிகழ்த்திய அதிபர் திரு. செ. கனகரெத்தினம் அவர்கள் புதிய கல்வித் திட்டத்தை விபரித்ததுடன், அதை அமுல் நடாத்தப் பெற்றோர்-ஆசிரியர் சங்கம் எடுத்த பெருமுயற்சியைப் பாராட்டினார் இதனைத் தொடர்ந்து திரு. க, கனகராசா அவர்கள் சிற்றுரையில் மாணவர்கள் வாழ வேண்டிய நல்வழிகளை நிலைவுறுத்தியதுடன் அதில் பெற்றோரின் பங்கைச் சீரிய முறையில் நிலைநிறுத்தல் அவசியமெனக் கூறியதுடன் தனது அன்பளிப்பாக இன்னுமொரு பாலர் அறையை அமைத்து தருவதாகவும் வாக்குறுதியளித்தார். இறுதியில் பெற்றோர்-ஆசிரியர் சங்கச் செயலாளர் திரு. மயில் அமிர்தலிங்கம் நன்றி கூறியதுடன் வைபவம் முடிவுற்றது. இவ்வைபவத்திற்கு வட்டாரக் கல்வி அதிகாரி. யாழ். இந்துக் கல்லூரி அதிபர் திரு. சபாலிங்கம், வித்வான் சுப்பையா பிள்ளை, ஆகியோரும் பெற்றோர் பலரும் வருகை தந்து ஆசி கூறினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவபரிபாலனசபைச்சரித்திரம்

## (50ஆம் வருடப் பூர்த்திப் பொன் விழா மலரிற் பத்திரிகாசிரியர் கூற்று 1938)

(முன் வளர்ச்சி — 9)

### VI யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

... .... ... வித்தியாசாலை பிள்ளைகளாலும் அதற்குத் தக ஆசிரியர்களாலும் பெருக்கமடைய உயர்தரக் கல்வியும் இதில் ஊட்டப்படலாயிற்று சென்னைச் சர்வகலா சங்கத்தாரின் பிரவேச பரீட்சைக்குரிய வகுப்புகளும் எவ். ஏ. F.A. பரீட்சைக்குரிய வகுப்புக்களும் இக்கலாசாலையில் வைத்து நடத்தப்பட இக்கலாசாலையும் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி என்னும் பெயருடன் உயர்தர கலாசாலையாயிற்று இக்கல்லூரி தன்னைத்தானே தாங்கி நடத்தக் கூடிய நிலைமையையடைந்துவிட சைவபரிபாலனசபையார் தம் அங்கத்தவருள் 30 பேரை இந்துக்கல்லூரி அதிகார சபையாராகத் தேர்ந்தெடுத்து, இலங்கையின் முதன் முதல் ஆங்கில சைவக்கல்லூரியாகவுள்ள இந்துக்கல்லூரியை அச் சபையாரிடம் ஒப்புவித்தனர். எனவே யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியும் சைவபரிபாலனசபையாரின் பெருமுயற்சிகளுட் சிறந்த பேருதமென்பது எவர்க்கும் புலப்படும் சைவபரிபாலனசபையார் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியை அதிகாரசபையாரிடம் ஒப்புவித்த காலம் 1902-ம் ஆண்டு ஏப்பிரல் மாசமாகும். இதன் பின்னர், சைவபரிபாலனசபையார் சைவ ஆங்கில தமிழ் வித்தியாசாலைகளைத் தாபித்தலாகிய தமபொறுப்பை இந்துக்கல்லூரி அதிகாரசபையார் பொறுப்பில் விடுத்தனர் இப்பொழுது இவ்வதிகார சபையார் பொறுப்பில் ஆங்கில தமிழ் வித்தியாசாலைகள் பதின் மூன்று உள்ளன.

(வளரும்)

# சேக்கிழார் சுவாமிகள் கண்ட தமிழகமும் இல்லறமும்

[ செ. சின்னத்துரை இளைப்பாறிய ஆசிரியர் ]

[முன் வளர்ச்சி — 3]

உருத்திரபசுபதி நாயனார் புராணத்தில் பெருந்திருத் தலையூர் என்னும் ஊரைப் பற்றி மிக அழகாகச் சேக்கிழார் சுவாமிகள் கூறுகிறார்.

"வானளிப்பன மறையவர்
வேள்வியின் வளர் தீர்
தேனளிப்பன நறுமல
செறி செழுஞ் சோலை
ஆனளிப்பன அஞ்சுகந்
தாடுவார்க்கு அவ்வூர்
தானளிப்பன தருமமும
நீதியும் சால்பும்".

அவ்வூர்ப்பிராமண உத்தமர்கள் வேள்களைப் பயபத்தி சிரத்தையோடு செய்கிறார்கள். அதனால் குறைவிலாமல் மழை பொழிகிறது, சாலை தேன் கொடுக்கிறது, பசுக்கள் பஞ்ச கௌவ்யத் திறகுரிய பொருட்களைக் கொடுக்கின்றன. பண்புள்ள மக்கள் தாம் பெற்ற பொருளை சிவன் தந்ததென்று நினைந்து தருமம் செய்கிறார்கள். சித்தத்தைச் சிவன்பால் வைத்த சான்றோர்கள் சைவ நீதியைக் கடைப்பிடித்து வையத்து வாழ் வாங்கு வாழ்கிறார்கள்." இச் செய்யுளின் பொருளை "வாழ்க அந்தணர்——" என்ற தேவாரத்தோடும் "வான்முகில் வழாது பெய்க ......' என்ற கந்தபுராணச் செய்யுளோடும் விளங்கும் பொருள் ஒற்றுமையை நோக்குக தருமமும் நீதியும் தான் உலகசெழிப்புக்குக்காரணம். இவை குன்றினால் எல்லாம் குன்றும் என்பது வெள்ளிடைமலை. தருமமும் நீதியும் சான்றாண்மையும் தான் நல்வாழ்விற்கு அச்சாணி என்பதைப் பற்பல இடங்களிற் சேக்கிழார் பெருமான் கூறுகிறார்.

சோழநாட்டு மக்கள் எப்படி வாழ்ந்தார்கள் என்றும் நாம் எப்படி வாழ வேண்டுமென்றும் சோழ நாட்டுச் சிறப்பில் புராண ஆசிரியர் கூறுவதை நோக்குக.

"ஆற்றி மிகுதி கொண்
டறங்கள் பேணி
பரவரும் கடவுள் போற்
றிக் குரவரும் விருந்தும்
பண்பின்
விரவியகிளையும் தாங்கி
விளங்கிய குடிகள் ஓங்கி
வரைபுரை மாடம் நீடி
மலர்ந்துள பதிகள்
எங்கும்".

அரசனுக்குக் கொடுப்பதைப் பற்றி முதற்கண் கூறுகிறார். அரசனுக்குரியதை முதற் கொடுத்துவிட்டு மிகுதி வருவாயைக் கொண்டு தர்மங்கள் வளர்த்தும், தெய்வத்திற்குரியதைக் கொடுத்தும், குரு, விருந்தினர் சுற்றத்தவராகியவர்களுக்குக் கொடுத்துப் வாழ்கிற பண்புள்ள மக்கள் தான் மாடங்களில் வாழ்கிறார்கள். "தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல் தான் என்று ஐம்புலததார் ஓம்பல் தலை" என்பது தலையாகிய நல்லறம் என்று இல்வாழ்க்கையைப்பற்றி திருவள்ளுவப் பெருந்தகை கூறுவதையும்நோக்குக. வருமான வரியைக் கொடாமல் ஏமாற்றியும் தான் மாத்திரம் வாழ்ந்தால் போதும் என்னும் இறுமாந்த நிலையும், மற்றவர்களை வஞ்சித்தும். ஏமாற்றியும், கள்ளச் சந்தையில் வியாபாரம் செய்தும் உள் ஈடு இல்லாத பதர்கள் போன்ற மக்கள் வாழும் இக்காலத்தில் தமிழ்நாட்டு மக்களின் மனப் போக்கை நோக்குக. மேலே காட்டியபடி மக்கட் பண்புக்குரிய இயல்புகளுடையராய், தாம் செய்ய வேண்டிய கடமைகளையும் செய்து சுறறந்தாழல். பாத்திரம் அறிந்து தர்மம் செய்தல் முதலியவற்றைக் குறையில்லாமற் செய்தல் மாக்ஷியம், சமதர்மம், (Marxism, Communism, Socielism) முதலிய பிறநாட்டிலிருந்து இறக்குமதியான கொள்கைக்கு இடமில்லாமற் போம் [illegible] சேக்கிழாரின் செய்யு[illegible]

"அரசுகொள் கடன்கள் ஒழுகினுல் பெண் பிள்ளை

## ஆனித் திருவிழா

தில்லையம்பதியில் ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்மை சமேத ஸ்ரீ நடராஜ மூர்த்தியின் ஆனித் திருமஞ்சன மகோற்சவம் 5—7—75 தொடக்கம், மகோற்சவம் 11 நாள் நடைபெறும், 5 ஆம் திருநாள் பஞ்சமூர்த்திகளின் ரிஷபவாகனகாட்சியும், 6ஆம் திருநாள் இரவு யானைவாகனக் காட்சியும், 7 ஆம் திருநாள் இரவு கைலாச வாகன காட்சியும், 8 ஆம் திருநாள் இரவு தங்க ரதத்தில் பிஹாடனர் காட்சியும் 9ஆம் திருநாள் திருத்தேர் விழா காட்சியும், 10 ஆம்திருநாள் அதிகாலையில் இராஜ சபையில் மகாபிஷேகமும் காலையில் பஞ்சமூர்த்திகளின் வீதியுலா தீர்த்தவாரியும். பகலில் ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ நடராஜ மூர்த்தியின் ஆனந்த நடனத் தரிசனமும் சிற்சிபாபிரவேசமும், மறுநாள் 11ஆம் திருநாள் இரவு முத்தப் பல்லக்குக் காட்சியும் நடைபெறும்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

மல்லாகம்
டிஸ்திறிக் கோட்டில்
இல: M B 13971

ஈவ்னே வயிரவன் சதர் பரி - வாதி

எதிராக

ஊரெளு 1 நாகமணி ஐயாத்துரையும் பெண்
2. அரியகுட்டியும்

பிரதிவாதிகள்

மல்லாகம் டிஸ்திறிக் கோட்டின் M B / 13971-ம இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும ஒரு துண்டுக் காணியை 1975-ம் ஆண்டு (யூலை) ஆடி மாதம் 30-ஆம் திகதி (30-7-75) புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அந்தக் காணிக்குள் நின்று பிரசித்தஏலத்தில் என்னல் விற்கப்படும்.

தீர்வைத் தொகை. முதல்வட்டி ரூபா 1803-25 இன்னும் ரூபா 1000/- க்கு 20-7-73 தொடக்கம் 5 4-74 வரைக்கும் 10 வீத வட்டியும் அதன் மேல் முழுத தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 267-72½ சதம்.

### காணியின் விபரம்

வட மாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி மல்லாகம் கோயிற்பற்று ஏழாலையிறை 'கொடுத்தாப்புலம்' நிலப் பரப்பு 2 இரண்டு பயிர்களும் வீடும் எல்லை கிழக்கு வல்லி பெண் இளையபிள்ளையினுதனம். வடக்கு ஒழுங்கை. மேற்கு வைத்தியர் பெண செல்லத்தினுதனம். தெற்கு காசியர் பெண கண்ணுத்தையினுதனம், இதடங்கலும்,

செ விசாகரத்தினம்
கொமிஷனரும்
விலைமதிப்பாளரும்

133, பருத்திததுறை ரேட்டு,
நல்லூர், யாழ்ப்பாணம்,
36-6 75 43 4-7-

களுக்கு இலட்சக் கணக்கில் சீதனம கொடுக்கும் வழக்கம் "இடம்பட வீடு எடேல்", என்றபடி வீடுகளை மாடமாளிகைகளாகக் கட்டும் வழக்கம், ஆடம்பர வாழ்க்கை முதலியன இராது. செல்வம் பெற்றவன் ஆடம்பர வாழ்க்கை வாழாமல், மற்றவர்களின் பொருமையை வருவிக்காமல் தாழ்மையாக பகிர்ந்து கொடுத்தால், பூசல்கள் இரா. அன்பு மார்க்கம் தான் உலக வாழ்க்கைக்கு [illegible] தார்கள், (வளரும்)

## பிரிவிடுதல் நொத்தீஸ்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம்

இல A 946 / 13018

வல்லிபுரம் கந்தசாமி பெண் மகேஸ்வரி கரவெட்டி — வழக்காளிகள்

எதிராக

1. சுப்பிரமணியம் நாகேந்திரா (வியாழவத்தை, கரவெட்டி)
2. பெண் சுந்திரவதன ( ,, , )
3. முருகேசு ராதாகிருஸ்ணன் ( ,, ,, )
4. வேலுப்பிள்ளை நாகலிங்கம் (குருந்தடி, நெல்லியடி; கரவெட்டி)
5. பெண் செல்லம்மா ( ,, ,, ,, )
6. சண்முகம் ரத்தினசிங்கம் (வியாழவத்தை, கரவெட்டி)
7. பெண் விமலேஸ்வரி ( ,, ,, )
8. கயிலம் கதிர்காமததம்பி ( ,, ,, )
9. பெண் கணேஸ்வரி ( ,, ,, )
10. சிதம்பரப்பிள்ளை சுப்பிரமணியம் ( ,, ,, )
11, பெண் சரஸ்வதி ( ,, ,, )
12. சுப்பிரமணியம் கதிர்காமத்தம்பி ( ,, ,, )
13 பெண் இந்துமதி ( ,, ,, )
14, வயித்திலிங்கம் பரராசசிங்கம் ( ,, ,, )
15, பெண் நிர்மலாதேவி ( ,, ,, )
16. சின்னையா பாலசுப்பிரமணியம் ( ,, ,, )
17. பெண் சரஸ்வதி ( ,, , )
18. மார்க்கண்டு பாஸ்கரன் (கரவெட்டி வடக்கு கரவெவட்டி) ,, (பராயமற்றவர்கள்)
19 மார்க்கண்டு பாமினி (கரவெட்டி வட. கரவெட்டி ,, )
20. மார்க்கண்டு பார்த்திபன் ,, ,, ,, )
21. மார்க்கண்டு பானுமதி ( ,, ,, ,, )
22. சின்னையா ரத்தினசிங்கம் ( ,, ,, -பராமரிப்புக்காரர்

எதிரிகள்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் கட்டைவேலிக் கோயிற்பற்று கரவெட்டி குறுளிக் குறிச்சி "வியாழவத்தை" நில பர 27 என்னுமாதனம் 1951 ம் ஆண்டின் 16 ம் இலக்கப் பிரிவிடுதற் கட்டளைச் சட்டத்திற்கமைய மேற்படி கோட்டில் மேற்படி இலக்கத்தில் ஓர் பிரிவிடுதல் வழக்குத் தொடர்ந்திருக்கின்றதென்று இத்தாலுமக் கறிவிக்கப்பட்டிருக்கின்றது,

மேற்படி வழக்கில் எதிரிகள் மேற்படி கோட்டில் 1975-ம் ௵ ஆடி மீ 10 உ 10 மணிக்குச் சமூகமளிக்கும்படி கட்டளை பண்ணப்பட்டிருக்கிறார்கள்.

கோட்டாரின் கட்டளைப்படி
M. Nadarajah
பிரதம லிகிதர்

1975-ம் ௵ ஆனி மீ 24 உ — 41, 4.7

## பிரிவிடுதல் நொத்தீஸ்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம்

சிவகுருநாதன் வரதராசா பெண் சின்னப்பிள்ளை புலோலி தெற்கு, புலோலி

இல. 13034 — வழக்காளிகள்

எதிராக

1, சின்னத்துரை கதிரவேற்பிள்ளை 2. பெண் கமலாசனி
அரசினர் வைத்தியசாலை கிளிநொச்சி
3, கிட்டினர் சிவப்பிரகாசம் (மந்திகை, புலோலி தெற்கு, புலோலி)
4, கணபதிப்பிள்ளை ரத்தினம் ( ,, ,, ,, )

— எதிரிகள்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி புலோலி கிழக்கு சிங்கபாகுதேவன் குறிச்சியிறை "ஒதி நின்ற சம்பாடு" நில பர 7 குளி 17.3:

என்னும ஆதனம் 1951-ம் ஆண்டின் 16-ம் இலக்கப் பிரிவிடுதல் கட்டளைச் சட்டத்திற்கமைய மேற்படி கோட்டில் மேற்படி இலக்கத்தில் ஓர் பிரிவிடுதல் வழக்கு தொடர்ந்திருக்கின்றதென்று இத்தாலுமக்கறிவிக்கப்பட்டிருக்கின்றது.

மேற்படி வழக்கில் எதிரிகள் மேற்படி கோட்டில் 1975 ம் ௵ ஆடி மீ 10 ந உ 10 மணிக்குச் சமுகமளிக்கும்படி கட்டளைபண்ணப்பட்டிருக்கிறார்கள்.

கோட்டாரின் கட்டளைப்படி
M. Nadarafah
பிரதம லிகிதர்.

இ: சதானந்தன்
சட்டத் தாணி.
1975 ம ஆ வைகாசி மீ 29 ம உ — 39. 4-7.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

மல்லாகம் டிஸ்திறிக் கோட்டில்

வழ இல: M. B. 13464

அளவெட்டி இராசகோபாலு இராமசந்திரன் — வாதி

எதிராக

அளவெட்டி சண்முகம் சிவகுரு — பிரதிவாதி

மல்லாகம் டிஸ்திறிக் கோட்டின் M B 13464- ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1975 ஆம் ஆண்டு ஆடி மாதம் 28-ஆம் திகதி (28—7—75) திங்கட்கிழமை முறபகல் 10.00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும.

### தீர்வைத் தொகை:

முதல் வட்டி ரூபா 6959-70 இன்னும் ரூபா 5000/- த்துக்கு 27-10-72 தொடக்கம் 24-5-74 வரைக்கும் வீத வட்டியும் அதன் மேல் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 641-35,

### காணியின் விபரம்

வட மாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்கு பகுதி மல்லாகம் கோவிற்பற்று அளவெட்டிபிறை "தொந்தானை" நிலப் பரப்பு 6¾ வான் பயிர் செய் பயிர்களும் இதற் கெல்லை கிழக்கு வழக்காளிக்குரியவாதனம். வடக்குரேட்டு. மேற்கு ஒளுங்கை, தெற்கு ஒளுங்கையும் கை ஒளுங்கையும். இவ் வெல்லைப்படி இது முளுவதும்.

செ. விசாகரெத்தினம்
கொமிஷனர் விலைமதிப்பாளர்

133 பருத்துறை ரேட்
நல்லூர், யாழ்ப்பாணம், 30 6-75 — 42 4.7.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### THOUGHTS TO BE TREASURED

ஆட்கொண்டவர் தனி நாயகன் அன்புற
மேற்கொண்டவர் வினைபோய் அற நாள்தோறும்
நீர்க்கின்ற செம்சடை நீளன், உருவத்தின்
மேற்கொண்ட ஆறலை வீவித்து ளானே.

The Gracious Lord possessed of long reddish entangled hair-locks destroys the pangs of birth in the body and the sins of the disciple who adores his spiritual teacher always as the peerless Lord Himself.

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாயவே ஞானமும் கல்வியும்
நமச்சிவாயவே நானறி விச்சையும்
நமச்சிவாயவே நாநவின் றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே.

திருச்சிற்றம்பலம்

Hindu Organ

FRIDAY, JULY 4, 1975

## TESTING TIME

Planetary changes had occurred in the past several times and the repercussions had never been unusually surprising. However, of late, astrologers have waxed e cquent on the double change during the current year by the movements of Jupiter and Saturn and have indicated the resulting commotion in the administrative affairs of leading nations. True to these indications, the entire world appears to have been caught in the tidal wave of disorganized disruption. It has become a testing time for not merely nations but also for humanity in general.

Scarcity of articles of food and the spectacular rise in the increase of population, no doubt have rocked the countries all over. But what has become rare is not so much food but as much commonsense. And development is not so much the numerical strength of people but as much expansion of ill will! The resulting situation is the predicament in which politicians and the people are placed.

The happenings in our neighbouring nation, a country that has earned a reputation of being very progressive, have created misgivings in the minds of almost every man and woman in the world. Factional differences have accumulated over the years forcing the surging up of disruptive tendencies both at the Centre and in the States. This has led to the formation of fronts alliances often with strange bedfellows and combinations of groups of adverse interests, all for the sole purpose of achieving a personal or political end. And what do we find today in that great Bharata of hallowed name, sanctified by sages, distinguished by dedicated services of patriots like Mahatma Gandhi Chaos and commotion! What a fall for the people! However, the greatness of the martyrdom of the thousands of Satyagrahis under the lofty leadership of the apostle of Soul Force-Mahatmaji will not, we are confident, run to waste The inspiration of the past has has such great force as to remedy the disease of the present.

# Specialist on Thiruvalluvar and Kabir

### Speaks at the South Asian Studies Seminar

Dr. Ravinder Kumar Seth Department of Hindi, University of New Delhi delivered a very interesting lecture on the changing patterns of Hindi Literature, at the South Asian Studies Seminar held at the Jaffna Campus, Thirunelvely on the first ultimo.

At the outset, he explained as to how the literature of a country is also conditioned by the social, political and economic changes. He cited some major incidents in post independence India like the Indo.Chinese war, the Indo-Pakistan war being reflected in the contemporary Hindi literature.

Analysing the salient features of the modern Hindi literature in the last fifty years, he said that romanticism was the dominant feature of the Hindi poems, novels and short stories before independence. But with the advent of independence, there is a definite change in the attitude of the poets and writers. They concentrate more on the social evils of the day. They care a lot for the common man, the farmer and the labourer. But previously, no poet or writer would hardly have thought on these subjects.

In poetry, there has been a marked change from traditionalism to modernism. Many poets dared not to follow the metres and the forms enjoined by the canons of poetry. A great poet like Surya Kanth Bhalti-Nala broke the shackles of metre in the early thirties R. H. Singh's Urvasi is an excellent work combining kama and the other desires of the individual, spiritual and material. The poetic form was used for satire, of maxims. The loneliness of the man in the modern urban and rural societies too is dealt with the modern literature.

( To be continued )

### PARTITION NOTICE

**IN THE DISTRICT COURT OF POINT PEDRO**

No 12421

Chellapackiam wife of K. Kandavanam of Karaveddy North, Karaveddy

Vs. Plaintiff

1 Kathiravelu Rajadurai and
2 wife Vanithamany
3 Sinnathamby Santhiraporabu
4 Sinnathamby Siriskandarajah
5 Thamber Krishnapillai
6 and wife Ledchumi-
7 Kumaru Krishneesparan
8 and wife Sivaneswary
9 Iyadurai Kandasamy and wife
10 Sivaneswary
11 Krishnapillai Iswaranathan
12 Krishnapillai Packiyawathie
13 Kathiripillai Selvarajah
14 and wife Pathmawathy
15 Chinniah Mylvaganam
16 and wife Pathinipillai
17 Chinniah Ratnasingam—all of Pon Kandiah Veedy, Karaveddy North
18 K. Kandavanam Court Road - Point Pedro

Defendants

It is hereby notified that action No. 12421 has been instituted in the District Court of Point Pedro under the Partition Act No. 16 of 1951 for the partition / sale of the land called "KooliyarSeema' in extent 4¾ Lms v c. veedu ¾ and situated at Vathirikurnchchy, Kaddaively Parish.

The defendants in the aforesaid action are summoned to appear in Court on the 5th day of July 1975.

By order of Court
Sgd. M. Nadarajah
Registrar

This 12th day of May 1975
9. 2/

## APPRECIATION

### C. SABARETNAM

The death of C. Sabaratnam removes a landmark in the teaching world of Jaffna and in Jaffna Hindu College. For more than four decades a familiar figure at Jaffna Hindu, those who knew him well must feel that with his passing what gave colour and pleasure to classroom and club has been diminished.

What little mathematics many of us from Jaffna Hindu knew was learnt first of all with him. With his insistence on precision and answering to the point and the repetition of the views without any personal eccentricities was where we began. He had the uncanny knack of taking the backward boy forward with his lessons. No wonder that he was known as 'Maths Saban' by generations of Jaffna Hinduites who have spread the masterly teaching of the subjects far and wide.

He was always forthright and simple; his manner, his sure hold on the affections of those he taught, made him already in his life time a legend; strangely enough all this accrued to one who looked stern and unbending in the exterior.

He was something more too. He was a symbol of some of the essentials of English education in Ceylon. The task he believed in was performed with devotion and selflessness. How many of us know that he was the first Tamil to captain the Soccer Eleven of the Ceylon University College in the twenties? It was not easy for a Jaffna boy to earn this coveted prize. He was talented in Chess and Bridge and was regarded as one of the best players in the county in the latter. Thirty four years of dedicated labours in the classroom earned him the headship of his Alma Mater and during the brief period of his principalship he did much to elaborate and embellish the work of his illustrious predecessors—Nevins, Sanjeeva Rao, Shiva Rao, Troupe Venkataraman, Cumaraswamy and Asaippillai.

Yet this is insufficient landmark, legend and symbol. What remains alive in all those years so full of stress and endeavour is the constant presence even in memory of the men to whom we looked up as teachers. There is a long line of them in Jaffna and among them C. Sabaretnam has an honoured place. Indeed like many of them he will soon serve to be past a myth —N. SABARATNAM

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரக செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க வோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்;

Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Saiva Prakasa Press 450 K. K. S. Road Vannarponnai, Jaffna on Friday July 4, 1975.

EDITOR-IN-CHIEF R. N. SIVAPIRAKASAM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org